# 100 நாள் வேலைத் திட்டத்தையே ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து கூட்டணிக் கட்சியினர் திரண்ட காட்சி!




100 நாள் வேலை திட்டத்தில் அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்கி, 100 நாள் வேலை திட்டத்தையே ஒழிக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து திருவாரூரில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சி.பி.ஐ. மத்திய கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் இரா. முத்தரசன் அவர்கள் பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினார். ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ. தேவா, நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளும், 100 நாள் வேலையில் பங்கேற்ற ஏராளமான ஆண், பெண் தொழிலாளர்களும் பங்கேற்றனர்.




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கரூர் வெண்ணைமலை, கரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ கண்டன உரையாற்றினார். ஒன்றிய கழக செயலாளர் முத்துக்குமாரசாமி, வேலுச்சாமி, வளர்மதி, கரூர் முரளி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து கலந்துகொண்டனர்.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில் ஒன்றிய பா.ஜ.க அரசைக்கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



விழுப்புரம் மத்திய மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கோலியனூர் பேருந்து நிறுத்தம் அருகில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர், டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். உடன் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள் இரா.ஜனகராஜ், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் உட்பட தி.மு.க. கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் ஒன்றிய அரசை கண்டித்து சேலம் மாவட்டம் காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக முன்பு நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா கலந்து கொண்டு கிராமபுற பொருளாதாரத்தை முடக்க முயற்சிக்கும் ஒன்றிய பாஜக அரசுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் 2000க்கும் மேற்பட்ட ஊரக வேலைவாய்ப்பு திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராகவும் பா.ஜ.க. அரசுக்கு துணை போகும் அதிமுகவிற்கு கண்டனம் தெரிவித்து முழக்கங்களை எழுப்பினர் ஆர்ப்பாட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்



அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும்சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியா ப்பட்டணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர்கள் ஏ.விஜயகுமார், க.ரத்தினவேல், ஏ.ஏ.ஆறுமுகம், கோபால், சங்கர், பாபு, பாக்கியலட்சுமி மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் , பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது. நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கி, மகாத்மா காந்தியின் பெயரை நீக்கியுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன முழக்கம் எழுப்பப்பட்டது ஆர்ப்பாட்டம் அரியலூர் மாவட்டம் முழுவதும் உள்ள ஆண்டிமடம், திருமானூர், ஜெயங்கொண்டம், அரியலூர், செந்துறை, தா.பழூர் ஆகிய அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெற்றது இந்த அறப்போராட்டத்தில், கழகத் தோழர்களும், கூட்டணிக் கட்சி நிர்வாகிகளும், பொதுமக்களும் பெருந்திரளாகப் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.




அரக்கோணம் சட்டமன்ற தொகுதியில் தலைமைக் கழகத்தால் அறிவித்த 100 நாள் வேலை திட்டத்திற்கான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அரக்கோணம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார், அரக்கோணம் மத்திய ஒன்றிய செயலாளர் பசுபதி மற்றும் க.தமிழ்மணி அரக்கோணம் மேற்கு ஒன்றிய செயலாளர் முன்னிலை வகித்தனர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர் சிறப்பு கண்டன உரை சூர்யா வெற்றிகொண்டான் (அரக்கோணம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர்) இறுதியில் அரக்கோணம் நகர கழக செயலாளர் வி.எல். ஜோதி நன்றி தெரிவித்தார்.